# PRIMARY SCHOOL

## SEMESTRAL ASSESSMENT 1 - 2014

## HIGHER MOTHER TONGUE – TAMIL

## PRIMARY 6 HMT

பெயர் : ____________________ தேதி : ________________

வகுப்பு : தொ.நி: 6 ______ மதிப்பெண்கள் : ___________/60

Total Time : 1h 20 mins

24 Questions

<u>INSTURCTIONS</u>

Do not open the booklet until you are told to do so.

Follow aal *instructions* carefullY.

Answer all questions.

MORE TESTPAPERS AVAILABLE AT TESTPAPERSFREE.COM

## உயர்தமிழ்

இவ்வினாத்தாளில் 2 கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம்.

*வினா 1*

பின்வரும் தலைப்பைக் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

உண்மை பேசியதால் ஏற்பட்ட நன்மை

பள்ளியில் உனக்கு ஒரு பிரச்சனை ஏற்பட்டது. அப்போது நீ உண்மை கூறுவதா இல்லையா என்று குழப்பத்தில் இருந்தாய். இறுதியில் நீ உண்மை கூறினாய். அதனால், உனக்கு நன்மை நிகழ்ந்தது.

*வினா 2*

**இடைவேளையின்போது எல்லா மாணவர்களும் உணவகத்தை நோக்கி சிட்டாய்ப் பறந்தனர். ஆனால், என் தோழி பானு மட்டும் உணவகத்திற்குச் செல்லாமல் ஒரு மூலையில் நின்றாள். அதைப் பார்த்து அவளை நோக்கிச் சென்றேன். அப்போது.......**

மேற்காணும் தொடக்கத்தைக் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

(முற்றும் )

# ‘அ’ பிரிவு

## A1 <u>பிழை திருத்தம்</u> (10 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.**

நம் நாட்டின் சாங்கி விமான நிலையம் உலகப் புகழ் பெற்று விளங்குகிறது. பல (Q1) <u>நாட்டிலிருந்து</u> நாள்தோறும் நூற்றுக்கணக்கான விமானங்கள் இங்கு வந்து செல்கின்றன. எந்நேரமும் சுறுசுறுப்புடன் இயங்கும் இது அழகும் தூய்மையும் நிறைந்து (Q2) <u>காணப்பட்டது</u>. சிறந்த நிர்வாகத் தரத்தாலும் பணிவான சேவையாலும் (Q3) <u>அக்ககரமான</u> செயல் திறனாலும் உலகின் தலை சிறந்த விமான (Q4) <u>நிலையங்களுல்</u> ஒன்றாக இது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. நம் நாட்டின் விமான நிறுவனம் புகழ்பெற்ற பல விமான நிலையங்களுடன் இணைந்து செயல்பட்டு (Q5) <u>வருகின்றன</u>. சிறந்த விமானப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்திப் பல்வேறு நாட்டினரும் தினந்தோறும் இங்கு வந்து செல்கின்றனர். இந்த உயர்ந்த தரத்தை நாம் என்றும் நிலைநாட்ட வேண்டுத்.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

## A2 வாக்கியங்களை முடித்து எழுதுதல் (8 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.**

Q6 மக்களுக்கு நல்வழி காட்ட, சான்றோர் பல நூல்களை எழுதிச் சென்றனர்.

சான்றோர் எழுதிய பல நூல்கள் ______________________________

______________________________.

Q7 குமணன், முகுந்தனின் வறுமையைப் போக்கப் பொருள் வழங்கி உதவினான்.

குமணனின் உதவியால் முகுந்தனின் வறுமை ______________________________

______________________________.

Q8 ஜப்பானில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் ஆயிரக்கணக்கானோர் தம் உயிர்களை இழந்தனர்.

ஜப்பானில் நிகழ்ந்த நிலநடுக்கம் ______________________________

______________________________.

Q9 உயிர் வாழ்வதற்கு நீர் தேவை.

நீர் இல்லாவிடில் ______________________________

______________________________.

## A3 வேற்றுமை உருபுகள் (8 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.**

எடிசன் என்பவர் ஒரு புகழ்பெற்ற விஞ்ஞானி. அவர் இளம் வயதிலேயே எதையும் ஆராய்ந்து அறியும் ஆவல் உடையவராகத் திகழ்ந்தார். ஒரு நாள் அவர் (Q10) ____________________(வானம்) பார்த்தார். வானத்தில் பறவைகள் பறந்துகொண்டிருந்தன. "அப்பறவைகளைப் போல் மனிதனால் பறக்க முடியுமா?" என்ற வினா அவர் மனதில் தோன்றியது. உடனே தன் (Q11) ____________________(வினா) விடை காணத் தன் நண்பனைப் பயன்படுத்தினார். சில இரசாயனப் பொருள்களைத் தயாரித்துத் தன் (Q12) ____________________(நண்பன்) கொடுத்து விழுங்கச் சொன்னார். அதன் முடிவு விபரீதமானது.

வயிற்றில் ஏற்பட்ட எரிச்சல் பொறுக்காமல் அவர் நண்பர் கதறத் தொடங்கினார். "நண்பா! உனக்கு என்ன ஆயிற்று?" என்று கதறியபடியே எடிசன் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். சரியான (Q13) ____________________(நேரம்) சிகிச்சை அளிக்கப்பட்டதால் எடிசனின் நண்பன் உயிர் பிழைத்தார். அன்று முதல் தன் ஆராய்ச்சிக்கு மனிதர்களைப் பயன்படுத்துவதில்லை என்று எடிசன் முடிவெடுத்தார்.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

# ‘ஆ’ பிரிவு

## B4 <u>கருத்தறிதல்</u> (8 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.**

சீத்தலைச் சாத்தனார் என்னும் புலவர் குமணவள்ளலைக் காண நினைத்தார். குமணவள்ளல் நாட்டைத் தன் தம்பியிடம் ஒப்படைத்துவிட்டு, காட்டில் வாழ்கிறார் என்பதைப் புலவர் அறிந்தார். (Q14) ________________________. அங்கு அவர் அந்த வள்ளலைக் கண்டார். புலவர் தன் வறுமை நிலையை வள்ளலிடம் எடுத்துக் கூறினார். “புலவர் பெருமானே! நான் வந்தவர்களுக்கு வாரி வழங்கிய நாள்களில் தாங்கள் வரவில்லை. (Q15) ________________________. ஆனால், என் தலைக்கு ஆயிரம் பொன் பரிசளிப்பதாக என் தம்பி அறிவித்துள்ளான். தாங்கள் இந்த வாளால் என் தலையை வெட்டி எடுத்துச் சென்று என் தம்பியிடம் கொடுத்து விடுங்கள். (Q16) ________________________” என்று கூறினார். இதை செவியுற்றப் புலவர் அதிர்ச்சியடைந்தார். “தலையையே கொடுக்க வந்த வள்ளலே! (Q17)________________________. நான் வரும்வரை இங்கேயே இருங்கள்,” என்று கூறிவிட்டு வாளை வாங்கிக்கொண்டு வள்ளலிடமிருந்து விடைபெற்றார். அங்கிருந்து அவர் குமணவள்ளலுடைய தம்பியின் அரண்மனையை நோக்கிச் சென்றார்.

(1) அவன் உடனே தாங்களை அடுத்த அரசனாக்கிவிடுவான்.
(2) வறுமையைப் போக்கும் பொருள் என்னிடம் இல்லை.
(3) காட்டிற்குச் செல்வதற்குப் பதிலாக, அரண்மனைக்குச் செல்லலாம் என எண்ணி புலவர் அங்குச் சென்றார்
(4) உங்கள் பேருள்ளம் என் மனதை உருக்குகின்றது.
(5) உங்கள் வறுமையைப் போக்குவதில் எனக்கு விருப்பம் இல்லை
(6) அவன் தரும் பரிசைப் பெற்றுக்கொண்டு பிணி நீங்கி வாழ்வீராக!
(7) நீங்கள் வாரி வழங்கும் பழக்கத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்.
(8) புலவர் குமணவள்ளலை நாடி நாட்டிலிருந்து காணகத்திற்குச் சென்றார்.

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

மற்ற பெங்குவின் பறவைகளின் குஞ்சுகளைப் பறிக்க முற்படும். அவ்வாறு செய்யும் போது பெங்குவின் பறவைகளிடையே நிறைய சண்டைகள் ஏற்படும்.

பெங்குவின் பறவைகள் மனிதர்களின் நண்பர்களாகக் கருதப்படுகின்றன. அவற்றை எளிதில் பழக்கலாம். அதனால் இவை மனிதர்களைப் பார்த்தால் பயப்படுவதில்லை. இவை சுமார் முப்பத்தைந்து ஆண்டுகள் வரை உயிர் வாழும்.

வினாக்கள்:

Q18. சில பறவைகள் உயரமாகப் பறக்க முடியாததற்குக் காரணங்கள் யாவை? (3 மதிப்பெண்கள்)

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

Q19. பெங்குவின் பறவைகள் ஏன் விந்தையான பறவைகளாகக் கருதப்படுகின்றன? (4 மதிப்பெண்கள்)

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

Q20. பெங்குவின் பறவைகள் எவ்வாறு தங்களது எதிரிகளிடமிருந்து தப்புகின்றன? (4 மதிப்பெண்கள்)

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

Q21. பெங்குவின் பறவைகள் நிமிர்ந்து நடக்க எவை உதவுகின்றன? (3 மதிப்பெண்கள்)

Q22. பெங்குவின் பறவைகளுக்கிடையே சண்டை ஏற்படக் காரணம் என்ன? (4 மதிப்பெண்கள்)

Q23. பெங்குவின் பறவைகளை ஏன் மனிதர்களின் நண்பர்களாகக் கருதுகிறோம்? (4 மதிப்பெண்கள்)

Q24. பொருள் எழுது

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. ஆற்றல் - ____________________ (2 மதிப்பெண்கள்)

ஆ. எதிரிகளுக்கு - ____________________ (2 மதிப்பெண்கள்)

# P6 HMT
# TESTPAPER 9

நம் நாட்டின் சாங்கி விமான............

1. நாடுகளிலிருந்து 2. காணப்படுகிறது 3. ஆக்ககரமான
4. நிலையங்களுள் 5. வருகின்றது

6. மக்களுக்கு நல்வழி காட்டின..

7. நீங்கியது.

8. ஆயிரக்கணக்கானோரின் உயிர்களை இழக்க வைத்தது.

9. உயிர் வாழ முடியாது.

10. வானத்தை 11. வினாவிற்கு 12. நண்பனிடம் 13. நேரத்தில்

14. 8 15. 2 16. 6 17. 4

18. தங்களது உடல் அமைப்பும் தங்களது வசிக்கும் இடமும் சில பறவைகள் உயரமாகப் பறக்க முடியாததற்குக் காரணங்கள் ஆகும்.

19. மற்ற பறவைகளைப் போல் பெங்குவின் பறவைகளால் வேகமாக நடக்கவோ அல்லது பறக்கவோ முடியாது என்பதாலும், அவற்றால் வேகமாக நீந்த முடியும் என்பதாலும் பெங்குவின் பறவைகள் விந்தையான பறவைகளாகக் கருதப்படுகின்றன.

20. பெங்குவின்களின் உடல்களின் மேல் புறத்தில் கறுப்பு நிறமாக இருப்பதால் அதன் எதிரிகளுக்கு தண்ணீரில் நிழல் போலக் காட்சி அளித்து அவற்றின் கண்களில் படாதவாறு இருக்கின்றன. இவ்வாறு அவை தங்கள் எதிரிகளிடமிருந்து தப்புகின்றன.

21. பெங்குவின் பறவைகள் நிமிர்ந்து நடக்க அவற்றின் கால்களும் குட்டையான வாலும் உதவுகின்றன.

22. முட்டைகளை அடைகாக்கும் பணியை ஆண் பெங்குவின்கள் செய்யும். முட்டை பொரிந்து குஞ்சு வெளியே வர எட்டு வாரங்கள் ஆகும். அதுவரை உணவின்றி இருக்கும் ஆண் பெங்குவின்களின் குஞ்சுகள் இறந்துவிட்டால் அவை மற்ற பெங்குவின்களின் குஞ்சுகளைப் பறிக்க முற்படுவதே பெங்குவின் பறவைகளுக்கிடையே சண்டை ஏற்படக் காரணமாகும்.

23. பெங்குவின் பறவைகளுடன் மனிதர்கள் எளிதாகப் பழக முடியும். அதனால் அவை மனிதர்களைப் பார்த்தால் அச்சப்படுவதில்லை. இதனால், பெங்குவின் பறவைகளை மனிதர்களின் நண்பர்களாகக் கருதுகிறோம்.

Q24. சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

அ. திறமை

ஆ. பகைவர்களுக்கு

# ‘இ’ பிரிவு

## C5 <u>சுயவிடைக் கருத்தறிதல்</u> (26 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றி படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.**

பறவைகள் பல விதம். அவை மரங்களிலும், காடுகளிலும், தோட்டங்களிலும், வீடுகளிலும் வாழ்கின்றன. பறவைகளில் பெரும்பாலானவை பறக்கும் **<u>ஆற்றல்</u>** பெற்றவை. ஆனால் சில பறவைகள் தங்களது உடல் அமைப்பினாலும் வசிக்கும் இடத்தினாலும் உயரமாகப் பறக்க இயலாமல் உள்ளன. கோழி, வாத்து போன்றவை பறக்க இயலாத பறவைகள் ஆகும்.

பெங்குவின் பறவைகள் மிகவும் விந்தையான பறவைகள் எனலாம். இவற்றால் பறக்கவும் முடியாது, வேகமாக நடக்கவும் முடியாது. ஆனால் அவற்றால் வேகமாக நீந்த முடியும். பெங்குவின் இனத்தில் பல வகை உண்டு. இவற்றுள் அரச பெங்குவின்தான் மிகப் பெரியது. பெங்குவின் பறவைகள் பெரும்பாலும் தென் துருவப் பகுதியில் தான் மிகுதியாகக் காணப்படும். பெங்குவின் பறவைகள் பனிப் பிரதேசத்தில் வசிக்கும் தன்மை உடையவை.

பெங்குவின்களின் உடல்கள் பெரியவை. அவற்றிற்குச் சிறிய இறக்கைகளும் கால்களும் உள்ளன. பெங்குவின் பறவைகளின் இறக்கைகள் அவற்றிற்குப் பறக்க உதவியாக இல்லாவிட்டாலும் தண்ணீரில் நீந்த பெரிதும் உதவுகின்றன. அவற்றின் உடல்கள் மேல் புறத்தில் கறுப்பு நிறமாகவும், மறுபக்கத்தில் வெள்ளை நிறமாகவும் இருக்கும். பெங்குவின்களின் **<u>எதிரிகளுக்கு</u>** அதன் மேல் இருக்கும் கறுப்பு நிறம் தண்ணீரின் நிழல் போல் காட்சி அளிப்பதனால் பெங்குவின்கள் அதன் எதிரிகளிடம் இருந்து தப்பிவிடுகின்றன. பெங்குவின் பறவைகளின் கால்கள் பின்னோக்கி அமைந்திருக்கும். பெங்குவின்கள் தரையில் ஊன்றி நிமிர்ந்து நடப்பதற்கு அவற்றின் கால்களும் குட்டையான வாலு உதவுகின்றன.

பெங்குவின் பறவைகள் பெரும்பாலும் சிறிய கடல்வாழ் உயிரினங்களையே உண்ணும். பெரும்பாலான பெங்குவின் பறவைகள் இரண்டு முட்டைகள் இடும். அரச பெங்குவின் பறவைகள் மட்டும் ஒரு முட்டைதான் இடும். முட்டைகளை ஆண் பெங்குவின் பறவைகள் தங்களது கால்களின் இடுக்குகளில் வைத்து அடைகாக்கும். குஞ்சு பொரிக்க சுமார் எட்டு வாரங்கள் ஆகும். அதுவரை ஆண் பெங்குவின்கள் உணவின்றி நிலத்திலேயே இருக்கும். அவற்றின் குஞ்சுகள் இறந்துவிட்டால் அவை